நடத்துகிறது. இப்பாசியினம் பல பூக்கும் தாவர (Angiosperm) வகைகளிலும், வாழ்ந்து வருவது அறியப்பட்டுள்ளது. லெம்னா, செரட்டோபில்லம் மற்றும் பல படுவப்பாசி இனங்களினுள் குளரோக்கைட்ரியம் (Chlorochytrium) குடிகொண்டுள்ளது.

### 6. விலங்கின அகவொட்டுப்பாசிகள் (Endozoophytes)

விலங்கின உடலங்களில் வாழ்கின்றன. சில பாசியினங்கள் விலங்கின உடலங்களில் வாழ்கின்றன. நன்னீர் கடற்பாசி உயிரின / சூஸாந்தெல்லா (Zooxanthella) எனும் பாசி, நன்னீர் கடற்பாசி உயிரின (fresh water sponges) உட்பகுதியில் காணப்படுகிறது. சூகுளோரெல்லா (Zoochlorella) என்ற பாசி, ஹைட்ரா, விரிடிஸ் என்ற விலங்கினத்தினுள் வாழ்கிறது. லேன்ஜிரான் (Langeron) என்ற வல்லுநர் (1923) ஆசிலட்டோரியேசி குடும்பத்தின் 14 இனங்கள் பல்வேறு முதுகெலும்பிகளின் (vertebrates) சுவாசப் பாதைகளிலும் செரிமானக் குழாய்ப்பகுதிகளிலும் வாழ்வதைக் கண்டறிந்தார்.

### 7. ஒட்டுண்ணிப்பாசிகள் (Parasites)

சில பாசிகள் உயர்தாவரங்களின் உறுப்புகளில் ஒட்டுண்ணிகளாக வாழ்க்கை நடத்துகின்றன. இதற்குச்சான்றாக, செபாலியுரஸ் வைரிசன்ஸ் (Cephaleuros Virescens) எனும் பாசியைக் கூறலாம். இப்பாசி அஸ்ஸாம் மாநிலத்தின் தேயிலை இலைகளின் பேரழிவுக்கு/சூறைக்கு (havoc of Tea) வழிவகுத்து விட்டது. இப்பாசியால் தேயிலை இலைகளில் வெண்துரு (Red rust of Tea) நோய் ஏற்பட்டதால் தேயிலை தயாரிப்பு ஸ்தம்பித்துப்போனது.

### 8. ஆற்றில் வளரும் பாசிகள் (Fluviatile algae)

சில பாசியினங்கள் வேகமாகப் பாய்ந்து செல்லும் ஓடைகளிலும் ஆறுகளிலும் வாழக்கூடியன. யுலோத்ரிக்ஸ் என்ற பாசி மலைகளின் ர்வீழ்ச்சிப்பகுதிகளில் காணப்படுகிறது. ஸ்டிஜியோகுளோனியம், பட்ரகோஸ்பெர்மம் முதலிய பாசிகள் டேராடூன் மற்றும் பிற லைப்பிரதேசங்களின் வேகமான நீரோட்டப்பகுதிகளில் காணப்படுகின்றன.

### ட்டம் (Nutrition)

பசுங்கனிகங்களை கொண்டு எளிய உடலமான பாசித்தாவரங்களே லத்தின் ஆதித்தாவரங்கள் என்பதை அறிவோம். ஒளிச்சேர்க்கை மூலம்



தனக்கு வேண்டிய ஊட்டப்பொருளான ஸ்டார்ச்சை தானே தயாரிக்கும் வல்லமை பெற்றிருப்பதால் இப்பாசிகள் சுயஜீவிகள் (autotrophs) என அழைக்கப்படுகின்றன.

$$CO_2 + H_2O \xrightarrow[\text{குளோரோபில்}]{\text{சூரிய ஒளி}} (CH_2O) + O_2 + H_2O$$

பிளாஸ்டுகளில் காணப்படும் பச்சய நிறமிகளே பசுமைக்கு காரணமாகின்றன. இந்நிறமிகள் குளோரோபில் என அழைக்கப்படுகின்றன. இந்நிறமிகளின் செறிவு பசும்பாசிகளில் மிகையளவில் காணப்படுகிறது. இருப்பினும் இந்நிறமிகள் செறிவைக் காட்டிலும் பியுகோஸாந்தின் என்ற பழுப்பு நிறமிகள் பழுப்பு பாசிகளில் காணப்படுவதால் அவை பழுப்பு வண்ணம் பெறுகின்றன. இதே போல r பைகோஎரித்ரின், r பைகோசைனின் நிறமிகள் செம்பாசிகளில் மிகையளவில் காணப்படுவதால் அவை செந்நிறமாகக் காணப்படுகின்றன. C.பைகோசையனின், C. பைகோஎரித்ரின் நிறமிகளின் செறிவால் மிக்ஸோபைசி (சையனோபைசி) நீலபசும் வண்ணத்தில் காணப்படுகிறது. எனவே இவ்வகுப்பு பாசிகளுக்கு நீலப்பசும்பாசிகள் என்று பெயர். ஸ்டார்ச்சுப் பொருட்களை மட்டும் உற்பத்தி செய்வதின்றி இப்பாசிகள் எண்ணெய்கள், புரதங்கள், கனிமங்கள் ஆகியவற்றையும் உற்பத்தி செய்கின்றன. நீரிலிருந்து $CO_2$யும், $H_2O$யும் ஆஸ்மாஸிஸ் மற்றும் ஊடுபரவல், விரவிப் பரவல் (diffusion) மூலமாக கார்போஹைட்ரேட்டை உற்பத்தி செய்யும் இந்நிகழ்வு உயிர்நிலை தாவரத்திலும் ஒத்துக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. குளோரோபில் நிறமிகளைக் கொண்ட பாசிகளானாலும், உயர்நிலை தாவரமானாலும் அவற்றிற்கு C, H, O, N, P, K, S, Ca, Fe, Mg ஆகிய அயனிகள் பெருமளவிலும் Mn, Bo, Zn, Cu, Co ஆகிய அயனிகள் மிகச் சிற்றளவிலும் தேவைப்படுகின்றன. டையாட்டம் போன்ற ஒருசில இனங்களுக்கு Si தேவைப்படுகிறது. அதே போல செனிடெஸ்மஸ் என்ற பாசிக்கு Mo தேவைப்படுகிறது.

ஒளியின் முன்னிலையில் அனங்கக (inorganic) ஊடகத்தில் வளரும் பாசிகளை ஒளிசுயஜிவிகள் (photoautrophic) என அழைப்பர். ஒருசில பாசியினங்களுக்கு கூடுதலாக வைட்டமின்களான B-12, தையமின் அல்லது பயோட்டின் தேவைப்படுகின்றன. இவ்வகைப் பாசிகளை ஒளி ஆக்ஸோட்ரோபிக் (photoauxotrophic) என அழைப்பர்.



Scanned with CamScanner

பல பாசிகள் பரஜீவிகளாகவும் (heterotrophic) வாழ்கின்றன. அனங்கக மூலத்திலிருந்து முழுமையாக புரோட்டோபிளாஸத்தை உருவாக்க இயலாத பாசிகளுக்கு கார்பன், நைட்ரஜன் போன்ற அடிப்படைத் தனிமங்கள் தேவைப்படுகின்றன. இவ்வகைப் பாசிகளை பரஜீவிகள் என்பர். ஒகேரோமோனஸ் (Ocaromonas) போன்ற பல பாசிகள் உணவிலுள்ள திண்மத்துகள்களை செரிமானிக்கும் திறன் பெற்றுள்ளன. இவ்வகைப் பாசிகளுக்கு உண்ணி ஜீவிகள் (phagotrophic) என்று பெயர்.

## உடல அமைப்புகளின் வரைமுறை (Range of vegetative structure)

பாசிகளின் உடலமைப்பு ஒழுங்குமுறைகளை கீழ்கண்ட முக்கிய வகைகளாக பிரித்தறியலாம்.

பாசிகளில் காணப்படும் தாலஸ், ஒற்றைச் செல் உடலங்களாகவும் (unicellular forms) பலசெல் உடலங்களாகவும் (multicellular forms) காணப்படுகிறது. ஒற்றைச் செல் உயிரினங்களில் இனப்பெருக்க நிலையின் பொழுது செல் பகுப்பு (cell division) நிகழ்கிறது. ஆனால், பலசெல்லாலான உடலங்களில் உடலநிலையிலும் (somatic phase) இனப்பெருக்க நிலையிலும் (reproductive phase) செல்பகுப்பு நடைபெறுகிறது. எனவே, தாலஸ் அமைப்பான்மையை (organisation) கொண்டு பாசிகள் கீழ்கண்ட குழுமங்களாகப் பிரிக்கப்பட்டள்ளன.

### 1. ஒற்றைச் செல் வளரியல்பு (Unicellular habit)

ஒரு செல்லாலான உடலங்கள் இயங்கும் இயல்பையோ இயங்கா (nonmotile) இயல்பையோ கொண்டிருக்கலாம்.

### அ) இயங்கும் ஒருசெல் உடலங்கள் (Unicellular Motile forms)

இவ்வகை உடலங்கள் பாசிகளின் பல வகுப்புகளில் காணப்படலாம். இவற்றின் உடலங்களில் செல்சுவர் காணப்படுவதோடு கசையிழைகளும் (Flagella) காணப்படுகின்றன. கசையிழை இரண்டாகவே இருக்கக்கூடும். கிளாமிடோமோனஸ் போன்ற இனத்தில் சமமான இரு கசையிழை காணப்படுகிறது. கிரிப்டோமோனாஸ் எனும் இனம் சமமற்ற கசையிழைகளைக் கொண்டுள்ளது. குரோமுலினா எனும் இனத்தில் ஒரே கசையிழை மட்டும் காணப்படுகிறது. சில இனங்கள் சுண்ணகத்தாலான அடைப்பால் (calcareous envelope) போர்த்தப்பட்டுள்ளன. இன்னும் சில இனங்கள்

Scanned with CamScanner